DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE FAST TRACK COURT (M.L) UTHAMAPALAYAM

Case No. STC.No.147/2025

Deposition of DW1

| | | |
|---|---|---|
| Name | : | திரு.தீபிகா |
| Father's / Husband Name | : | ராஜேஷ்கண்ணா |
| Village | : | |
| Taluk | : | உத்தமபாளையம் |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23nd day of February 2026.

புகார்தாரர் ஆஜர்.

<u>முதல் விசாரணை:</u>

1. புகார்தாரரை எனக்கு தெரியாது. புகார்தாரரின் மனைவி வினோதினியைதான் எனக்கு தெரியும். அவரை கேட்ரிங் பயிற்சி மூலம்தான் எனக்கு பழக்கம். எனது சித்தி கார்த்திகாதேவி என்பவருக்கு பணம் வேண்டும் என்னிடம் ரூ.4 லட்சம் கேட்டார். அப்போது என்னிடம் பணம் இல்லை. வினோதினி என்பவரிடம் நான் பணம் கேட்டிருந்தேன். அவர் ஒரு இடத்தின் பத்திரத்தை கேட்டார். எனது சித்தி அவரது இடத்து பத்திரத்தை கொடுத்தார். நான் பணம் வாங்கி கொடுத்ததால் என்னுடைய காசோலையை வினோதினி கேட்டார். வினோதினி வார வட்டிக்கு பணம் கொடுத்தார். என்னுடைய கணக்கிலிருந்து அவருக்கு நான் பணம் செலுத்தியுள்ளேன்.

2. எனது குடும்பத்தில் பிரச்சனை இருந்த காரணத்தினாலும், அசலுக்கு மேல் வட்டி கொடுத்துவிட்டதாலும், நான் வட்டி தொகையை கொடுக்க நிறுத்தி விட்டேன். மேற்படி தொகையை எனது கணவருக்கு

தெரியாமல் தான் வாங்கி கொடுத்தேன். எனது வீட்டிற்கு வந்து வினோதினியும்,அவரது குடும்பத்தார்களும் வந்து பிரச்சனை செய்து பணத்தை கொடுக்குமாறு கேட்டார்கள். நான் தேனி மாண்புமிகு கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் IP 43/2025 என்ற வழக்கை வினோதினிக்கு எதிராக தாக்கல் செய்தேன். மேற்படி வழக்கின் அழைப்பாணையினை பெற்றுக்கொண்டு பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார். நான் ரூ.20 லட்சம் பணம் வாங்கவில்லை.

புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை

புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள் படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.02.23 18:15:51 +0530

J.M, F.T.C(M.L),Uthamapalayam